# பல்லவியில் லயத்தின் முக்யத்வம்

2

**M.பாலமுரளிகிருஷ்ணா & முனைவர் S.விஜயராகவன்**
**தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழகம்.**
**சென்னை-28.**
balamuralikrishna.22@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்**

செவ்விசை நிகழ்வுகளில் வழங்கப்படும் ஸங்கீதத்தை கல்பித ஸங்கீதமென்றும் மனோதர்ம ஸங்கீதமென்றும் இரண்டு பிரிவுகளாக பிரிக்கலாம். கல்பித சங்கீதம் என்பது பெரியோர்கள் செய்த உருப்படிகளைக் குறிக்கும். ராக ஆலாபனை, தானம், பல்லவி, நிரவல், ஸ்வரம் – இவை மனோதர்ம ஸங்கீதத்தை குறிக்கும். இதில் பல்லவி பாடுவது மிகவும் சிறந்த கலையாகும்.

பல்லவிகள் பாடுவதில் லயத்திற்கு மிக முக்கியமான பங்கு உண்டு. கடினமான தாளங்களை கையாளுவதும், எடுத்துக் கொண்ட பல்லவியில் அனுலோமம் , ப்ரதிலோமம் மற்றும் விலோமம் முதலியன கையாளுவதும் மிகவும் கடினமான பயிற்சியும், மிகுந்த கவனமும் இருந்தாலே சாத்தியம். இவைகளை செய்ய முற்படுவதற்கு முன்பு லயத்தில் நல்ல பிடிப்பும் , நல்ல தேர்ச்சியும் இருக்க வேண்டும். ராகம் , தானம், நிரவல், கல்பனை ஸ்வரங்கள் மற்றும் லய வேலைப்பாடுகள் – இவை எல்லாவற்றையும் ஒருங்கிணைத்து ஒரே இடத்தில் நிகழ்த்துவதால் பல்லவி என்பது செவ்விசையில் ஓர் ‘சிகரம்’ என அழைக்கப்படுகிறது.

**திறவுச் சொற்கள்:** ராகம், தானம், பல்லவி, நிரவல்,ஸ்வரம்,அனுலோமம், ப்ரதிலோமம், விலோமம்

**முன்னுரை**

பல்லவிகளைப் பற்றி 13ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட ‘‘ஸங்கீத ரத்னாகரம்’’ என்ற நூலில் குறிப்பிட்ட பொழுதிலும், சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியில் அது மிகவும் பரிமளிக்க தொடங்கியது. ‘ரூபக ஆலப்தி ’ (ஒரு ரூபக அல்லது இசையைத் தழுவிய ஆலப்தி) என்று ரத்னாகரத்தில் கூறப்பட்டுள்ளதே பிற்காலத்தில் பல்லவியாக வளர்ந்தது.

பல்லவி பாடும் முறையினை ‘பச்சிமிரியம் ஆதியப்பையா ’ (18ஆம் நூற்றாண்டு) அவர்கள் சீர்பெற வகுத்ததாக பெரியோர்கள் கூறுவர். மேலும் கோயம்புத்தூர் ராகவ அய்யர் ( 18ஆம் நூற்றாண்டு) அவர்கள் முதன் முறையாக பல்லவி என்பதை அரங்கத்தில் நிகழ்த்தியதாகவும் வரலாறு கூறுகிறது.

**பல்லவியின் அமைப்பு**

பதம், லயம், வின்னியாசம் என்னும் மூன்று வார்த்தைகளின் முதலெழுத்து சேர்க்கையே (ப+ல+வி) முறையே ‘பல்லவி’ என்று ஆயிற்று என்று சான்றோர்கள் கூறுவர். பதங்களை (ஸாஹித்யம்) லயத்துடன் வின்னியாசம் செய்வதே பல்லவி என்றும் அழைக்கப்படுகிறது.

ஒரு பல்லவியில் பொதுவாக பூர்வாங்கம் (முதல் பாகம்) மற்றும் உத்திராங்கம் (இரண்டாம் பாகம்) இருக்கும். இந்த இரண்டிற்கும் நடுவே வருவது ‘பதகர்ப்பம்’ என அழைக்கப்படும். பதகர்ப்பத்திற்கு பிறகு வரும் கார்வை பகுதி ‘விஸ்ராந்தி’ என அழைக்கப்படும். முறையே ‘பதகர்ப்பம்’

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

மற்றும் 'விஸ்ராந்தி'க்கு முன் வருவது பூர்வாங்கம்; பின்னர் வருவது உத்திராங்கம். அழகு நயத்திற்காக, ஒரு தாளத்தின் மையப்பகுதியே இப்பதகர்ப்பம் ஆகும். உதாரணமாக ஆதி தாளத்தில் 'அருதி' அல்லது பதகர்ப்பம் முதல் த்ருதத்தின் தட்டில் அமையும். திஸ்ர திருபுடை தாளத்திலும் இதேவாறு அமையும். சில தாளங்களில் இரண்டு அருதிகளும் உண்டு. உதாரணமாக அட தாளம் , மட்ய தாளம், ஸிம்மநந்தன தாளம் போன்றவை.

பல்லவிகளின் வார்த்தைகள் பெரும்பாலும் பக்தி ரசமாக இருக்கும். சில சமயம் ச்ருங்கார ரசத்தோடும் அல்லது பரிஹாச ரசத்தோடும் இருக்கும்.

**லயத்தின் முக்யத்துவம்**

பல்லவிகள் பாடுவதில் செவ்விசையின் அனைத்து மனோதர்ம அம்சங்களுக்கும் முக்கியத்வம் கொடுத்தாலும், லயத்திற்கு தனிச்சிறப்பு உள்ளது. ஏனெனில் , மற்ற உருப்படிகளில் நடைமுறையில் செய்யாத லய விஷயங்கள் பல்லவியில் மட்டுமே கையாளப்படுகிறது.

பல்லவியில் லய வேலைப்பாடுகளை காணும்பொழுது , முக்கியமாக: அனுலோமம் ; ப்ரதிலோமம்; விலோமம் இவைகளை செயல்பாடாகக் கொள்ள வேண்டும்.

**அனுலோமம்**

தாளத்தை முதல் காலத்தில் (பல்லவி எடுத்துக் கொண்ட காலம்) அமர்த்திக் கொண்டு பல்லவியை 2ஆம் காலத்திலும், 3ஆம் காலத்திலும் பாடுவது அனுலோமம் என அழைக்கப்படுகிறது.

இப்பழக்கம் சதுஸ்ர கதி பல்லவிகளில் - உதாரணமாக 8 களை அல்லது 4 களை அல்லது 2 களை பல்லவிகளை எடுத்துக் கொள்ளும் பொழுது , தாளம் 8 களை அல்லது 4 களையிலும், இசைப்பதை 4, 2 மற்றும் 1 காலத்திற்கு இசைத்து பின் சம காலத்திற்கு வரவேண்டும். இது மத்யம கால பல்லவிகளுக்கு பொருந்தாது. அப்படிப்பட்ட பல்லவிகளுக்கும் , மற்ற கதியில் அமைந்த பல்லவிகளுக்கும், இந்த அனுலோமம் செய்வதை – ஒரு காலம் துரிதமாகவும் , ஒரு காலம் சௌக்கமாகவும் இசைக்கலாம். இதையே 'த்ரிகாலம்' என்றும் அழைக்கலாம்.

இவ்வகையில் இசைக்கும்பொழுது – சதுஸ்ர கதி பல்லவிகளில் திஸ்ரமும் கையாளலாம். பல்லவியின் எடுப்பு (ஆரம்பம்) ஸமத்திற்கு முன்போ அல்லது பின்போ இருந்தால் திஸ்ரம் செய்வதை அருதியிலிருந்து தொடங்கவும் அதே இடத்தில் முடிக்கவும் இயலும்.

அனுலோமம் செய்யும்பொழுது கீழ்காலம் பாடுவதில் இரண்டு ஆவர்த்தனங்கள் எடுத்துக் கொள்ளப்படும். அதே போல் மேற்காலம் பாடும்பொழுது , 4 முறை பாடுவது வழக்கத்தில் உள்ளதால், அதுவும் 2 ஆவர்த்தனங்கள் காலம் எடுக்கப்படும்.

**ப்ரதிலோமம்**

பல்லவியை முதல் காலத்தில் இசைத்துக் கொண்டு தாளத்தை சம காலத்திலும் , 2ஆம் மற்றும் 3ஆம் காலத்தில் கணக்கிட்டு இசைப்பது ப்ரதிலோமம் ஆகும். இதை அனுலோக செயல்பாட்டிற்கு தலைகீழான செயல்பாடாகவும் கருதலாம்.

மத்யம கால பல்லவிகளிலும் மற்ற கதியில் அமைந்த பல்லவிகளில் , தாளத்தை ஒரு காலம் துரிதமாகவும், ஸம காலமாகவும், கீழ் காலமாகவும் இசைக்கலாம்.

இதில் அனுலோமத்தில் தாளம் 2 ஆவர்த்தனங்கள் வருவது போல் , ப்ரதிலோமம்

செய்யும்பொழுது, பல்லவியை 2 முறை இசைக்க வேண்டும். அதாவது கீழ் காலம் ஒரு ஆவர்த்தனம் இடும்பொழுது, பல்லவி இரண்டு முறை இசைத்தால் , திரும்ப எடுப்பிற்கே வரும். அதேபோல் , மேல் காலம் 4 முறை தாளம் இட்டாலும், பல்லவி 2 முறை இசைத்தால், சரியான அளவில் வந்து அமையும்.

**விலோமம்**

இம்முறை அனுலோமம், ப்ரதிலோமத்தை விட சற்றே கடினமானதாகக் கருதப்படுகிறது. இதில் தாளமும், பாட்டும் (பல்லவி) ஒரு காலம் ஒருசேர துரிதமாகிறது. அதாவது, ஒருவேளை பல்லவி மத்யம காலத்திலோ அல்லது

2 களையிலோ அமைந்தால், தாளத்தையும், பல்லவியையும் 1 களையாக்கி அல்லது மேல் காலமாக்கி, அதை ஸம காலமாக பாவிக்க வேண்டும். இதில் இசைச்சுவை நயத்திற்காக , நாம் தாளத்தை அதேபோல் மேல் காலத்தில் அமர்த்திக் கொண்டு பல்லவியை மத்யம காலத்திலும் , கீழ் காலத்திலும் பாட வேண்டும். ஏனென்றால் தாளமே மேல் காலத்தில் உள்ளபொழுது , அதற்கும் மேல் காலம் பாடுவது என்பது மிகவும் சிரமமும் , இசைப்பதற்கும் கேட்பதற்கும் சற்று ரசக் குறைவாக இருப்பதற்கு சாத்தியக்கூறுகள் அதிகம். மேலும் , அதிமேல் காலத்தில் பல்லவி வார்த்தைகளை உச்சரிப்பது கடினமானதாகவும், எளிதில் புரியாமலும் இருக்க வாய்ப்பு இருப்பதால் , இதுபோன்று கீழ் காலமும் , அதிகீழ் காலமும் கையாளப்படுகிறது.

**கடினமான தாளங்கள்**

பல்லவிகள் பாடுவதில் மற்றொரு சிறப்பம்சம் என காணும்பொழுது , பொதுவாக உருப்படிகளுக்காக கையாளும் தாளங்களான ஆதி , ரூபக சாபு , மிஸ்ர சாபு , கண்ட சாபு தாளங்களை மட்டும் கையாளாமல் , மற்ற இதர பல வகை தாளங்களையும் பயன்படுத்தலாம். அதுமட்டுமின்றி , 4 களை, 8 களை (ஆதி தாளமாகவே இருந்தாலும்) , சிலமுறை 32 களைகளாகவும் அமர்த்திக் கொண்டு பாடுவது – வழக்கமாக பாடும் 1 களை அல்லது 2 களை ஆதி தாளத்தை விட பன்மடங்கு கடினமானது. மேலும், மற்ற நான்கு கதிகளிலும் (திஸ்ர , கண்ட, மிஸ்ர மற்றும் ஸங்கீர்ண) பல்லவிகளை அமைத்து பாடுவது பல்லவி பாடும் முறைக்கே ஒரு சிறப்பம்சம் என கருதப்படுகிறது. 20ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மற்றும் பல வினோதமான தாளங்களிலும் பல்லவிகள் அமைக்கப் பெற்றிருக்கின்றன.

**பல்லவிகள் அமைந்த சில தாளங்களின் விவரங்கள்:**

சப்த தாளங்கள்: ஐந்து ஜாதிகளில் வரும் தாள எண்ணிக்கை – 35 தாளங்கள்.

ஐந்து வகை ஜாதிகளோடு ஸப்த தாளங்கள் ஐந்து வகை கதிகளில் வரும் தாள எண்ணிக்கை 35 x 5 = 175 தாளங்கள்.

மார்க தாளங்கள்: உதாரணமாக – ஸிம்மநந்தன தாளம்.

முகி தாளங்கள்: உதாரணமாக பஞ்சமுகி தாளம்.

சந்த தாளங்கள்: பல்லவி வார்த்தைகள் சந்தத்திற்கேற்ப.

**பல்லவி உதாரணம்:–**

பஞ்சமுகி தாளம் (ஆதி தாளத்தில் தட்டுகளில் மட்டும் கண்ட கதியாகவும், எண்ணிக்கைகளிலும் திருப்பும்பொழுதும் சதுஸ்ர மத்யம கால கதி)

**ராகம்: வராளி** **தாளம்: ஆதி தாளம் பஞ்சமுகி**

ஸ நி கா ப | ம த | , த | நீ | ஸா; ஸ் | ரி ஸ் | நி த ப ம க | ரீ ||
க ரு ட க | ம ன | ரா | | ரா க | ம லா | ம னோ ஹ | ர ||

**முடிவுரை**

பல்லவியில் லயத்தின் முக்கியத்துவத்தினை காணும் பொழுது , அதில் ராக ஞானம் , தாளக்கட்டு, பாடல் வரிகளின் போக்கு , கற்பனை வளம் , திறமையை ஒரு கலைஞர் வெளியிடும் ஆற்றல் முதலிய அனைத்து அம்சங்களையும் கொண்டதே பல்லவி என விளங்குகிறது. மேலும் பல்லவிகளில் தாளமாலிகை பல்லவிகளும் இசைப்பதுண்டு. ஒரு பல்லவியில் பலவித தாளங்களை கையாளுவதே இதன் சிறப்பு அம்சமாகும். எனவே பல்லவியில் லயத்தின் பங்கு மகுடமாக விளங்க வேண்டும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

**துணைநூற்பட்டியல்**

1. ஸங்கீதசாரம் — திரு.R.V. கிருஷ்ணன், மூன்றாம் பாகம், 2006, கிரி டிரேடிங் ஏஜென்ஸி பிரைவேட் லிமிடெட், சென்னை.
2. அபூர்வ ராகம் (மாத இதழ்) — ISSN – 2395 – 2202, ‘‘பல்லவியின் வரலாறு’’ பேராசிரியர் B.சாம்பமூர்த்தி
3. Ragam Tanam Pallavi (Their Evolution, Structure and Exposition) — Dr. M.B.Vedavalli, ASIN – B01B8833U6, The Karnatic Music Book Centre, Chennai. 1-4-2014.
4. இந்திய இசைக் கருவூலம் — Dr. K.A.பக்கிரிஸாமி பாரதி, குசேலர் பதிப்பகம், சென்னை 2002.